Paper ID: IC23

# வறுமை ஒழிப்பில் பைதுஸ் ஸகாத் நிறுவனத்தின் பங்களிப்பு – (பறகஹதெனிய பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு)

**MRF. Shimaya[1] , MHM. Muzlifa [2] & MN. Nasra[3]**

[1,2 & 3] Department of Islamic Studies, Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka.
shimayaraazik@gmail.com, m.muzlifa@gmail.com, ifol4me@gmail.com.

**ஆய்வுச் சுருக்கம்**

சமூகப் பொருளாதார அம்சங்களை பொறுத்தவரையில், ஸகாத் மிக முக்கிய அங்கமாக விளங்குகின்றது. குறிப்பாக வறுமையை சமூக வாழ்விலிருந்து விரட்டி பொருளாதார சமநிலையை ஏற்படுத்துவதில் கூடுதலான கவனம் செலுத்துகின்றது. இது தவிர பொருளாதார ரீதியில் சமூகம் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளை தீர்ப்பதன் மூலம் சமூகத்தை மேம்படுத்த உதவுகின்ற ஒரு பொருளாதார ஒழுங்காகவும் அது செயற்படுகின்றது. ஸகாத் பொருட்களை சேகரிக்கவும், பாதுகாக்கவும், அவற்றை விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யவும், அவை மக்களுக்கு பிரயோசனமாக அமைய வழிகாட்டவும் கூட்டமைப்பு தேவைப்படுகின்றது. முஸ்லிம் சமூகம் கூட்டாக இக்கடமையை நிறைவேற்றுகின்ற போதுதான் இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற பலாபலன்களையும், நன்மைகளையும் உச்சமாக அடைந்து கொள்ள முடியும். எமது ஆய்வுப் பிரதேசமான பறகஹதெனிய கிராமத்தின் வறுமை ஒழிப்பில் பைதுஸ் ஸகாத் நிறுவனத்தின் பங்களிப்பினை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். இவ்வாய்வானது பறகஹதெனிய பிரதேசத்தின் பைதுஸ் ஸகாத் நிறுவனங்களின், 2011 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையுள்ள தகவல்களை மையப்படுத்தியதாகும். இவ்வாய்வு முறையியல் பண்பு ரீதியான முறையை தழுவியதுடன், முதலாம் இரண்டாம் தரவுகளை கொண்டமைந்துள்ளது. இவ்வாய்வின் பெறுபேறாக, பறகஹதெனிய பிரதேசத்தின் வறுமையை ஒழிக்க பைதுஸ் ஸகாத் நிறுவனங்கள் பங்களிப்பு செய்கின்றன. எனினும் , இரு பைதுஸ் ஸகாத் நிறுவனங்களும் ஒன்று சேர்ந்து தனது செயற்பாடுகளை மேற்கொண்டால் வறுமை ஒழிப்பில் இன்னும் வினைத்திறனான பங்களிப்பினை வழங்கலாம்.

**திறவுச்சொற்கள்:** ஸகாத், பைதுஸ் ஸகாத், வறுமை

**ஆய்வுப் பின்னணி**

உலகில் மனிதத் தேவைகளை பூர்த்தி செய்வதாக காணப்படுவது பொருளாதாரம். எனவே தான் இன்று பல ஆயிரக்கணக்கான ஆய்வுகள் பொருளாதாரத்தை மையப்படுத்தியதாகவே அமைந்துள்ளன. எனினும் இன்று உலக பொருளாதார நிலையை நோக்குமிடத்து 45 மில்லியன் மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. (World Bank- 2015) வறுமையை ஒழிப்பதற்காக சர்வதேச மட்டத்தில் பல திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன எனினும், முழுமையாக அதற்கான தீர்வுகள் பெறப்பட்டதாக இல்லை.

எமது நாடான இலங்கையிலும் கூட வறுமை பிரச்சினை காணப்படுகின்றன. உலக வங்கியின் அறிக்கைப்படி இலங்கையின் மொத்த சனத்தொகையில் 23% வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர்.

இலங்கையிலும் கூட பல்வேறு செயற்திட்டங்கள் வறுமையை ஒழிப்பதற்காக செயற்படுத்தப்பட்ட போதிலும் வறுமை பாரியதொரு பிரச்சினையாக தொடர்ந்தும் காணப்படுகின்றன.

இஸ்லாம் சகல துறைக்கும் வழிகாட்டியுள்ளது போல வறுமையை ஒழிப்பதிலும் தனது வழிகாட்டலை வழங்கியுள்ளது. இதனை நிவர்த்தி செய்யும் நோக்கில் இஸ்லாம் பிரதான கடமைகளில் ஒன்றாக ஸகாத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

''தொழுகையை நிலைநாட்டுங்கள் ஸகாத்தையும் கொடுத்து வாருங்கள்.'' (2:43)

ஸகாத்தை நிறுவனப்படுத்தி கூட்டாகவே நிறைவேற்ற வேண்டும் என்பதை பல அல்குர்ஆன் வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன.

''நபியே அவர்களது பொருள்களிலிருந்து கடமையான ஸகாத்தை எடுப்பீராக''. (9:103)

பொதுவாக முஸ்லிம்கள் ஸகாத் கடமையை நிறைவேற்றிய போதிலும், இலங்கைப் போன்ற நாடுகளில் இன்னும் பல முஸ்லிம் குடும்பங்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர்.

வறுமை பிரச்சினையானது ஒரு சமூகப் பிரச்சினையாகும்.சமூகத்தில் ஒரு பிரிவினர் வறுமையால் பீடிக்கப்படும் போது சமூக வளர்ச்சியிலும், முன்னேற்றத்திலும் தாக்கம் செலுத்துகின்றது. பணம் படைத்தவர்கள் மீது வெறுப்பு, பொறாமை போன்ற உள நோய்களை அது ஏற்படுத்துகின்றது. சில போது முழு சமூகத்தின் மீதும் ஆத்திரம் கொண்டவர்களாகவும் அவர்களை ஆக்கி விடுகின்றது. இதன் காரணமாகத்தான் ஏழைகளுக்கு தனவந்தர்கள் ஸகாத் எனும் கடமையின் மூலம் உதவுவதைக் கொண்டு இஸ்லாம் இவ் ஏற்றத்தாழ்வை சமநிலைப்படுத்துகின்றது.

எனவே இன்றைய சூழலில் ஸகாத் பற்றிய விழிப்புணர்வும், அதன் முறையான விநியோகமும் காலத்தின் தேவையாக காணப்படுகின்றது. வறுமையினை ஒழிப்பதற்கு தனித்து நின்று தீர்த்து வைப்பது சிரமமான காரியமாகும். எனவே சமூகத்தின் அங்கமாக காணப்படுகின்ற நிறுவனங்கள் ஸகாத் சேகரிப்பினை மேற்கொண்டு அதற்கான சிறந்த தீர்வுகளை வழங்குவது சாலச் சிறந்ததாகும். குறிப்பாக மஸ்ஜித்கள் இவ்விடயத்தில் கூடிய கவனத்தினை செலுத்த வேண்டும்.

அந்த வகையில், எமது நாட்டிலும் பல பிரதேசங்களில் மஸ்ஜித்களை அடிப்படையாகக் கொண்டு நிறுவன ரீதியாக ஸகாத் கூட்டாக நடைபெற்று வருவதனையும், வருடாவருடம் பல ஊர்களில் அவை வளர்ச்சி கண்டு வருவதனையும் நாம் அவதானிக்கின்றோம்.

அந்த வகையில், இலங்கையில் வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் பறகஹதெனிய பிரதேசமானது முஸ்லிம்கள் அடர்த்தியாக வாழும் பிரதேசமாகும். இங்கு சுமார் 2100 முஸ்லிம் குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இப்பிரதேசத்தில் இரண்டு பிரதான மஸ்ஜித்கள் காணப்படுகின்றன. ''ஜாமிஉல் அன்வர்'', ''ஜாமிஉத் தௌஹீத்''. அவை தமது நிர்வாகத்திற்குற்பட்ட தனவந்தர்களிடமிருந்து தமது ஸகாத் நிதிகளை சேகரிக்கின்றனர். பைதுஸ் ஸகாத் நிறுவனம் பறகஹதெனிய பிரதேச முஸ்லிம் வறிய மக்களின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் வறுமை ஒழிப்பில் எவ்வாறான பங்களிப்பினை மேற்கொள்கின்றது என்பதனை மதிப்பிடுவதே இவ்வாய்வாகும்.

**ஆய்வுப் பிரச்சினை**

வறுமை என்பது இன்று தனிமனிதனை மட்டுமன்றி சமூகத்தை பாதிக்கும் ஓர் கொடிய நோயாகும். மூன்றாம் உலக நாடுகளை வெகுவாக பாதித்திருக்கும் இக்கொடிய நோயை இல்லாமல் ஒழிக்க

பல்வேறு மட்டத்தில் பல்வேறு திட்டங்களை அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் வகுத்த போதிலும் வறுமையானது, இன்றளவும் மக்களை அச்சுறுத்திய வண்ணமே காணப்படுகின்றது. இஸ்லாம் அனைத்து துறைக்கும் வழிகாட்டியுள்ளது போன்று வறுமை ஒழிப்புக்கும் நடைமுறை சாத்தியமான சில திட்டங்களை வகுத்துத் தந்துள்ளது.

முஸ்லிம்களை பெரும்பான்மையாக கொண்டு காணப்படும் எமது ஆய்வுப் பிரதேசத்திலும் ஸகாத் நிதியினை கூட்டாக நிறைவேற்றுவதற்காக பைதுஸ் ஸகாத் நிறுவனம் இயங்கி வருகின்றது. பறகஹதெனிய பிரதேசத்தில் காணப்படும் வறிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி அவர்களுக்கான நிலையான தொழில் முயற்சியொன்றை மேற்கொள்ள உதவி புரிவதே இந்நிறுவனத்தின் நோகக்கமாகும். எனவே பறகஹதெனிய பிரதேச முஸ்லிம் வறிய மக்களின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் வறுமை ஒழிப்பில் பைதுஸ் ஸகாத் நிறுவனம் எத்தகைய பங்களிப்பை மேற்கொள்கிறது என்பதனை கண்டறிவதே இவ்வாய்வுப் பிரச்சினையாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

**ஆய்வின் நோக்கம்**

‘‘வறுமையை ஒழிப்பதில் பைதுஸ் ஸகாத் நிறுவனத்தின் பங்களிப்பு (பறகஹதெனிய பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு)’’ எனும் தலைப்பில் மேற்கொள்ளப்படும் இவ்வாய்வானது பறகஹதெனிய பிரதேசத்தின் முஸ்லிம் வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதில் ‘‘பைதுஸ் ஸகாத்’’ நிறுவனத்தின் பங்களிப்பு எவ்வாறு காணப்படுகின்றது என்பதோடு, இந்நிறுவனத்தின் செயற்பாடுகள் மூலம் மக்களது வாழ்வாதாரம் மேம்படுகின்றதா? என்பதனை பரிசீலிப்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வு பண்பு ரீதியான முறையைத் தழுவியதுடன், முதலாம், இரண்டாம் தரவுகளை மையப்படுத்தியதாகவும் காணப்படுகின்றது. முதலாம் நிலைத் தரவுகளாக பறகஹதெனிய பிரதேசத்தின் ‘‘பைதுஸ் ஸகாத்’’ நிறுவனங்களின் செயலாளர்களை சந்தித்து நேர்காணல் மேற்கொள்ளப்பட்டது. மேலும், பைதுஸ் ஸகாத் நிறுவனத்தின் மூலம் ஸகாத் நிதியினை பெற்றுக் கொண்ட சில பயனாளிகளிடம் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டது. இரண்டாம் நிலைத் தரவுகளாக, இவ்வாய்வு தொடர்பான தகவல்கள், ‘‘பைதுஸ் ஸகாத்’’ நிறுவனத்தின் அறிக்கைகள் மூலம் பெறப்பட்ட தரவுகள் MS Excell மென்பொருளை பயன்படுத்தி பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், ஆய்வறிக்கை, புத்தகங்கள் மூலமும் தகவல்கள் பெறப்பட்டன.

**கலந்துரையாடல்**

இஸ்லாத்தின் சமூகப் பொருளாதார அம்சங்களைப் பொருத்தவரையில் ஸகாத் மிக முக்கிய அங்கமாக விளங்குகின்றது. குறிப்பாக வறுமையை நீக்கி பொருளாதார சமநிலையை ஏற்படுத்துவதில் அது கூடுதலான கவனம் செலுத்துகின்றது. இது தவிர, பொருளாதார ரீதியில் சமூகம் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளைத் தீர்ப்பதன் மூலம் சமூகத்தை மேம்படுத்த உதவுகின்ற பொருளாதார ஒழுங்காகவும் அது செயற்படுகின்றது. இந்த வகையில் நோக்கும் போது ஸகாத் என்பது மனித வரலாற்றில் முதன்முதலில் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட மிகச் சிறந்ததொரு பொருளாதார தீர்வாக குறிப்பிடலாம்.

அந்த வகையில் இலங்கையில் தற்போது கிட்டத்தட்ட 50 பதிவுசெய்யப்பட்ட பைதுஸ்ஸகாத் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. வறுமை ஒழிப்பில் இவற்றின் பங்களிப்பு எவ்வாறு அமைகின்றது என்பதை மதிப்பிடும் நோக்கில் இவ்வாய்வானது பறகஹதெனிய பிரதேசத்தை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வுப் பிரதேசமானது 2100 முஸ்லிம் குடும்பங்களைக் கொண்டுள்ளது. இதில் சுமார் 40 குடும்பங்கள் ஸகாத் பெற தகுதியுடையவர்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். வருடந்தோரும் இங்கு தனியாகவும் பைதுஸ்ஸகாத் ஊடாகவும் தனவந்தர்கள் தமது ஸகாத்தினை வழங்கிவருகின்றனர். பைதுஸ்ஸகாத் ஊடாக வினியோகிக்கப்படும் விபரங்கள் கீழ்வருமாறு,

**<u>ஜாமிஉல் அன்வர்</u>**

| | தொகை | பங்களிப்பு செய்தவர்களின் - எண்ணிக்கை |
|---|---|---|
| 2011 | 720,500.00 | 26 |
| 2012 | 1,034,600.00 | 28 |
| 2013 | 923,500.00 | 19 |
| 2014 | 1,098,370.00 | 25 |
| 2015 | 1,538,390.00 | 35 |
| 2016 | 1,617,520.00 | 34 |

Table- 1.1

Source: Annual Report of Baithuz Zakath 2010-2016

ஜாமிஉல் அன்வர் பைதுஸ் ஸகாத் நிறுவனத்தை பொறுத்தவரையில், 2011 ஆம் ஆண்டு 720,600.00 கிடைக்கப் பெற்ற தொகை 2016 ஆம் ஆண்டில் 1,617,520.00 தொகையாக அதிகரித்துள்ளதோடு பைதுஸ் ஸகாத் நிறுவனத்திற்கு பங்களிப்பு செய்தவர்களின் தொகை 2011 இல் 26 ஆக காணப்பட்டு 2016 இல் 34 ஆக அதிகரித்துள்ளமையை காண முடிகின்றது.

**<u>ஜாமிஉத் தௌஹீத்</u>**


| வருடம் | தொகை | பங்களிப்பு செய்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2011 | 1,758,904.00 | 47 |
| 2012 | 1,624,600.00 | 50 |
| 2013 | 1,560,000.00 | 45 |
| 2014 | 2,003,000.00 | 43 |
| 2015 | 1,918,500.00 | 46 |
| 2016 | 2,883,000.00 | 55 |

Table-1.2

Source: Annual Report of Baithuz Zakath 2010-2016

ஜாமிஉத் தௌஹீத் பைதுஸ் ஸகாத் நிறுவனத்தை பொறுத்தவரையில், 2011 ஆம் ஆண்டு 1,758,904.00 கிடைக்கப் பெற்ற தொகை 2016 ஆம் ஆண்டில் 2,883,000.00 தொகையாக

அதிகரித்துள்ளதோடு பைதுஸ் ஸகாத் நிறுவனத்திற்கு பங்களிப்பு செய்தவர்களின் தொகை 2011 இல் 47 ஆக காணப்பட்டு 2016 இல் 55 ஆக அதிகரித்துள்ளமையை காண முடிகின்றது.




எனவே எமது ஆய்வுப் பிரதேசமான பறகஹதெனிய கிராமத்தின் இரு பைதுஸ் ஸகாத் நிறுவனங்களின் பங்களிப்பினை சலாகை வரைபு மூலம் பகுப்பாய்வு செய்யுமிடத்து, 2011, 2012 ஆம் ஆண்டுகளில் வளர்ச்சி கண்டு 2013 ஆம் ஆண்டு சிறு அசமந்தப் போக்கை கொண்டிருப்பினும், அதற்குப் பின்னரான 2014, 2015, 2016 ஆம் ஆண்டுகளில் அதன் வளர்ச்சிக் கட்டங்கள் அதிகரித்து சென்றுள்ளமையை காண முடிகின்றது.

ஜாமிஉல் அன்வர்

| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|
| **கடன்** | | 40,000 | 50,000 | | | 120,000 |
| **சுயதொழில்** | 550,000 | 242,500 | 293,000 | 65,000 | 160,000 | 310,000 |
| **பக்கீர்-மிஸ்கீன்** | 20,000 | | 45,000 | 15,000 | | |
| **விதவை** | 57,600 | | 48,000 | 70,000 | 15,000 | |
| **வீடு திருத்தம்** | | 132,000 | | 180,000 | 405,000 | 527,000 |
| **புதிய முஸ்லிம்** | 30,000 | 15,000 | 20,000 | 40,000 | 85,000 | |
| **மின் இணைப்பு** | 20,000 | | 35,000 | 40,000 | | |
| **மருத்துவ உதவி** | | 50,000 | 32,500 | 95,000 | 120,000 | 215,000 |
| **கல்வி** | | 55,000 | | 306,000 | 170,000 | 60,000 |

Table- 2.1

Source: Annual Report of Baithuz Zakath 2010-2016

ஜாமிஉல் அன்வர் பைதுஸ் ஸகாத் நிறுவனத்தினை பொறுத்தவரையில், இந்நிறுவனம் அதிகமான தொகையை சுய தொழில் முயற்சிக்காகவும், வீடு திருத்த வேலைக்காகவும், புதிய முஸ்லிம்களுக்காகவும் விநியோகம் செய்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|
| **கடன்** | 117,021 | 60,000 | | | 55,000 | 25,000 |
| **தொழில் வாய்ப்பு** | 123,800 | 150,000 | | 100,000 | 203,000 | 337,000 |
| **மருத்துவ உதவி** | 81,000 | | | 80,000 | | |
| **கல்வி** | 15,000 | | | | | |
| | 55,000 | 55,000 | 40,000 | 300,000 | 440,000 | 645,000 |
| **வீடு திருத்த வேலை** | 341,193 | 231,000 | 335,000 | 190,000 | 79,710 | 420,000 |
| **ஸகாத் வசூலிப்பவர்** | 120,000 | 140,000 | 125,000 | 145,000 | 160,000 | 190,000 |
| **மின் இணைப்பு வசதி** | 60,000 | | | | | |
| **தொண்டர் ஆசிரியர் சம்பளம்** | 12,000 | 36,000 | 36,000 | | | |
| **நிதியுதவி** | 1,045,000 | 915,000 | 1,060,000 | 1,080,000 | 800,000 | 1,232,500 |

Table-2.2

Source: Annual Report of Baithuz Zakath 2010-2016

ஜாமிஉத் தௌஹீத் பைதுஸ் ஸகாத் நிறுவனத்தினை பொறுத்தவரையில், இந்நிறுவனம் அதிகமான தொகையை பணத்தொகையாக விநியோகம் செய்துள்ளதோடு மேலும் வீட்டுத் திருத்தம், ஸகாத் விநியோகம் செய்பவர்களுக்காகவும், கிணறு கட்டுதல் போன்ற நடவடிக்கைகளுக்காகவும் அதிகமான தொகையை விநியோகம் செய்துள்ளனர்.

ஸகாத் விநியோகத்தை பொறுத்தவரையில், ஸகாத் பெற தகுதியானவர்களை உள்வாங்கி ஸகாத் விநியோகம் நடைபெற்றிருப்பதை அவதானிக்கலாம்.

பைதுஸ் ஸகாத் நிறுவனத்தின் பயனாளிகளிடம் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்ட போது சுயதொழில் முயற்சிக்காக பெற்றுக் கொண்ட நிதியினை கால்நடை வளர்ப்பு, தையல் இயந்திரம், புல்வெட்டும் இயந்திரம், முச்சக்கர வண்டி, மரம் வெட்டும் இயந்திரம் என்பவற்றின் மூலம் தமது வாழ்வாதாரத்தை கொண்டு செல்கின்றனர். மேலும் பல்கலைக்கழக, தொழில் பயிற்சிநெறி நிலையங்களில் தமது கல்வியைத் தொடர முடியாமல் இருந்தவர்கள் பைதுஸ் ஸகாத் நிதியின் மூலம் தமது கல்வியை வெற்றிகரமாக கற்றுக்கொண்டும் சிலர் அதனை பூர்த்தி செய்தும் உள்ளனர். பல மோசமான நிலையில் இருந்த வீடுகள் பைதுஸ் ஸகாத் நிதியுதவியின் மூலம் திருத்தியமைத்து கொடுக்கப்பட்டுள்ளன. விதவைகளுக்கு நிதியுதவிகள் வழங்கப்பட்டிருப்பினும், ஓரிரு வருடங்கள் மாத்திரம் நிதியுதவி வழங்கப்பட்டிருப்பதனால் தொடர்ந்து அவர்கள் அதனை எதிர்ப்பார்த்த வண்ணமுள்ளனர். அதுமாத்திரமின்றி நிதியுதவி, மருத்துவ உதவி, கடனுதவி போன்ற ஸகாத் பெற தகுதியானவர்கனை உள்வாங்கி அவர்களது தேவைக்கேற்றாற் போன்று நிதியுதவிகளை செய்து வந்துள்ளது.

**ஆய்வு முடிவு**

ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கும், வீழ்ச்சிக்கும் பொருளாதாரம் காரணமாக அமைகின்றது. இதனை நிவர்த்தி செய்வதற்காக இஸ்லாம் அதன் ஐம்பெருங் கடமைகளில் ஒன்றான ஸகாத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. இதனால் செல்வம் ஒரு சாராரிடம் மட்டும் சுழலாமல் இருப்பதற்கு இஸ்லாம் வழிவகுத்துள்ளது. ஸகாத் எனப்படுவது செல்வந்தர்கள் தாம் நினைத்த மாதிரி தமது செல்வத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட பகுதியைத் தேவையுள்ளவர்களுக்கு வழங்குகின்ற ஒரு

கடமையல்ல. மாறாக, அதற்கு ஒரு பரந்த நோக்கம் இருக்கின்றது. ஓர் உயரிய இலட்சியத்தை நோக்கமாகக் வைத்தே அது கடமையாக்கப்பட்டுள்ளது. இதற்கு கூட்டமைப்பும் திட்டமிடலும் அவசியமாகின்றது.

இவ்வாய்வுப் பிரதேசமான பறகஹதெனிய பிரதேசத்தில் 40% ஸகாத் பெற தகுதியுடையவர்களாக காணப்படுகின்றனர். இவர்கள் தமது அடிப்படை தேவைகளில் போதிய கவனம் செலுத்த வேண்டியவர்களாவர். பறகஹதெனிய பிரதேசத்தில் காணப்படும் பைதுஸ் ஸகாத் நிறுவனங்களானது படி முறை ரீதியாக வளர்ச்சி கண்டு வருகின்றது. அதன் மூலம் பல நூற்றுக் கணக்கான ஏழைக்குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

பக்கீர்-மிஸ்கீன் ஒதுக்கீட்டின் கீழ் அடிப்படை தேவைகளான இருப்பிட வசதி (வீடு திருத்தம்) என்பவற்றோடு சுய தொழில் முயற்சிக்கான உதவிகள், வாழ்வாதார உதவிகள், கூரை திருத்தம், உயர் கல்விக்கான உதவி, தொழில்நுட்ப கல்விக்கான உதவி, கடன்களுக்கான உதவு தொகைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் ஒரு சில தொகையினர் தமது வாழ்வாதாரத்தில் முன்னேற்றம் கண்டு வருகின்றனர். இன்னும் சிலர் தமது தொழில் தரத்தில் அபிவிருத்தியடைந்ததுடன், பொருளாதார முன்னேற்றத்தை அடைந்துள்ளதை காணக்கூடியதாக உள்ளது. வறுமை காரணமாக கல்வியை தொடர முடியாமல் இருந்த மாணவர்கள் தமது கல்வியைத் தொடர முடியுமான நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் இரு பைதுஸ் ஸகாத் நிறுவனங்களும் இணைந்து செயற்படாமை, கூட்டு ஸகாத் பற்றிய தெளிவின்மையால் ஒரு சிலர் ஸகாத்தினை தனியாக நிறைவேற்றுகின்றமை, பைதுஸ் ஸகாத் நிறுவனங்கள் பற்றிய விமர்சனங்கள் என்பவற்றால் அது சில சவால்களை எதிர்நோக்குகின்றது என்பதனை இணங்காணக் கூடியதாக இருந்தது.

எனினும், பறகஹதெனிய பைதுஸ் ஸகாத் நிறுவனத்தின் காத்திரமான பங்கீட்டிற்கும், பறகஹதெனிய முஸ்லிம் வறிய மக்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்கும் தொடர்பு காணப்படுகின்றது என்பது இதன் மூலம் தெளிவாகின்றது.

**உசாத்துணைகள்**


1. ஜாமிஉல் அன்வர், (2016), 2010 - 2016, கணக்கறிக்கை, கூட்டு ஸகாத் அமைப்பு, பறகஹதெனிய
2. ஜாமிஉத் தௌஹீத், (2017), 2010 - 2016, கணக்கறிக்கை, கூட்டு ஸகாத் அமைப்பு, பறகஹதெனிய
3. அய்யூப் அலி, (2010), ''ஸகாத் ஒரு கூட்டுக்கடமை'', அல்ஹுதா பப்ளிசர்ஸ்.
4. Minnathul Suheera MY, Jasheela Nashri MM, and Jamaldeen A, (2015), "The Role of Zakath on Poverty Alleviation: An Empirical Study at Ninthavur, Sri Lanka". Paper Proceeding of Faculty of Islamic Studies And Arabic Language, SEUSL.